# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.391/2022 P.W.3

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | அனிதா ஸ்ரீ | த–பெ | செல்வம் |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 21/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | கல்லூரி | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.05.2026**

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனது பிறந்த தேதி என்ன என்றால் 07.09.2004. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் போது எனக்கு 11 வயது என்றால் சரிதான். நான் அப்போது என்ன படித்து கொண்டிருந்தேன் என்றால் 6 ம் வகுப்பு. என்னை போலீஸ் அழைத்து சென்று எங்கு வைத்து விசாரித்தார்கள் என்று சொல்லமுடியாது என்றால் சரிதான். தற்போது நான் மேஜர் ஆன பின்னர் படித்து பார்த்த பின்பு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் போது சிறுது நினைவு மட்டுமே எனக்கு உள்ளது என்றால் சரிதான். நான் சத்தம் போட்ட பின்னர் தான் அருகில் இருந்தவர்கள் அங்கு வந்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளேன் ஆனால் என்னால் யார் யார் என்று கூட சொல்ல முடியாது. மேற்படி தகவல்களை எனக்கு தாயார் தற்போது நினைவூட்டி சொல்லி தான் என்கு தெரியும் என்றால் சரிதான். சம்பவம் நடந்த தினத்தன்று நான் பள்ளிக்கு செல்லவில்லை என்றால் சரிதான். நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் போது பள்ளிக்கு சென்று தேர்வு எழுதினேனா என்றால் எனக்கு நினைவில்லை. தேர்வு எழுத சென்றேன் என்று சொன்னாலும் என்னால் சொல்ல இயலாது. என் தாயார் கேட்டு கொண்டதற்கினங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.05.08 17:59:24 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.